


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.6.2025) சென்னை, எழும்பூர், தாளமுத்து – நடராசன் மாளிகையில் உள்ள சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் தலைமை அலுவலகத்தில், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் "நாடு போற்றும் நான்காண்டு – தொடரட்டும் இது பல்லாண்டு" நான்காண்டு சாதனைகள் குறித்து அமைக்கப்பட்டுள்ள புகைப்படக் கண்காட்சியினை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.6.2025) சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் 16–வது சர்வதேச இயந்திர கருவிகள் கண்காட்சியினை (ACMEE 2025) தொடங்கி வைத்து, கருவிகளை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ. கருணாநிதி, ஜோசப் சாமுவேல், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல் ஆனந்த், சிட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் / முதன்மைச் செயலாளர் ஆ. கார்த்திக், அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் சதீஷ் பாபு, கவுரவ பொதுச் செயலாளர் கே. தவமணி, அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்க நிர்வாகிகள், தொழில் அதிபர்கள் மற்றும் பல்வேறு தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.6.2025) சென்னை, கிண்டி, கத்திப்பாரா பகுதியில் மாதவரம் – சோழிங்கநல்லூர் வழித்தடத்தில் நடைபெற்று வரும் மெட்ரோ இரயில் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சென்னை மெட்ரோ இரயில் நிறுவன உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.6.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், கழக மாணவரணி சார்பில் கீழடி ஆய்வறிக்கையை ஒன்றிய அரசு புறக்கணிப்பதைக் கண்டித்து நேற்று நடைபெற்ற "கீழடி தமிழர் தாய்மடி மாபெரும் போராட்டம் வெற்றி பெற்றதையொட்டி கழக மாணவரணி செயலாளர் ராஜீவ் காந்தி, மற்றும் நிர்வாகிகள் மண்ணை த. சோழராஜன், அதலை செந்தில்குமார், திருமதி பூரண சங்கீதா, ஈரோடு வீரமணி, அமுதரசன், கோகுல் ராமகிருஷ்ணன், மாவட்ட அமைப்பாளர் பாண்டி முருகன், அன்பு, ஆதிசங்கர் உள்ளிட்டோர் சந்தித்து வாழ்த்து பெற்றனர். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.6.2025) சென்னை, எழும்பூர், தாளமுத்து – நடராசன் மாளிகையில் உள்ள சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் தலைமை அலுவலகத்தில், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் "நாடு போற்றும் நான்காண்டு – தொடரட்டும் இது பல்லாண்டு" நான்காண்டு சாதனைகள் குறித்து அமைக்கப்பட்டுள்ள புகைப்படக் கண்காட்சியினை பார்வையிட்டு, பணியாளர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.6.2025) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்க பாண்டியன் அவர்கள், புதுடெல்லி Swaniti Initiative மற்றும் London School of Economics and Political Science இணைந்து நடத்துகின்ற லண்டன் காலநிலை மாற்றம் வார விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி நடைபெறுகின்ற தமிழ்நாட்டில் காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வு, மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றி எடுத்துரைக்க லண்டன் செல்வதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் உரையாற்றினார். உடன், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்பி., சி.என்.அண்ணாதுரை.எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஒ.ஜோதி மற்றும் டாக்டர் மாசிலாமணி, டாக்டர் மாலதி, எஸ்.பி.மணிமாறன், பா.செந்தமிழ்ச்செல்வன், ஊரல் அண்ணாதுரை, ஆர்.டி.அரசு, கே.செந்தில்குமார் மற்றும் இரா.ஸ்ரீதரன், கு.கருணாநிதி, எஸ்.பன்னீர்செல்வம், க.சௌந்தரராசன், பிரியா விஜயரங்கன், விஜயலட்சுமிரமேஷ், ப.கார்த்திவேல்மாறன் உட்பட பலர் உள்ளனர்.